**ஹட்டன் – நுவரெலியா வீதி முன்னேற்றச் செயற்திட்டம் - 2013**

ஹட்டன் – நுவரெலியா வீதி முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) கொரியா குடியரசு அரசாங்கத்தின் சார்பில் கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 நவம்பர் 02 ஆந் திகதிய எஸ்ஆர்ஜ -20 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

ஹட்டன் – நுவரெலியா வீதி முன்னேற்றச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. ஹட்டனிலிருந்து நுவரெலியா மாவட்டம் வரை சந்தைகளிற்கான நுழைவுகளை முன்னேற்றுதல் மற்றும் வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்களை வழங்கல் மற்றும் சமூக சேவைகள் என்பனவற்றின் மூலம் தென் மாகாணத்தில் சமூக பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி சமநிலையை தூண்டுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 5,618 மில்லியனானதுடன் அதில் மொத்தக் கிரயத்தில் 80 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 4,501 மில்லியன் கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் (ஈடிசீஎவ்) நிதியளிக்க வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. எவ்வாறாயினும், மொத்த கிரய மதிப்பீடு கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் அனுமதியுடன் ரூபா 5,685 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 திசெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் தொடங்கிய திகதியிலிருந்து 30 மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், பூர்த்தியாக்கல் திகதி மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்ட மேலதிக வேலைகள் காரணமாக 2015 மார்ச் 02 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மொத்த கிரய மதிப்பீடு செயற்திட்டத்தால் ரூபா 9,061 மில்லியன் வரை மேலும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத்த தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வைபார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியிணர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை,

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும், செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கு ஏற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் கண்ணோட்டத்தில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியவையாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவைகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டும் வண்ணம் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்ட அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்,

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 1,766 மில்லியனாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 2,998 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம். |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | (35,596) | 146,656 | 129,585 |
| நடைபெறும் வேலைகள் | 1,765,664,857 | 1,102,215,706 | 2,998,000,297 |
| | 1,765,629,261 | 1,102,362,362 | 2,998,129,882 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு முரணாக தெயட்ட கிருல கண்காட்சிக்காக கையேடு அச்சிடுவதற்காக ஏற்பட்ட ரூபா 199,800 தொகை செயற்திட்டத்தின் செலவினமாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

### 5.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்களுடன் இணங்காமை

2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353/(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாக செயற்திட்டதால் வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களிற்கான ஓட்ட அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலங்கள் | கடன் உடன்படிக்கையில் உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய திரண்ட நிதி | சதவீதமாக காலப் பகுதிக்கான பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | - |
| கொரிய ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 35.37 | 3,980.38 | 1,004.62 | 1,004.62 | 2,445.09 | 100% |
| இலங்கை அரசாங்கம் | 15.14 | 1,704.62 | 86.76 | 75.68 | 116.15 | 87% |
| | 50.51 | 5,685.00 | 1,091.38 | 1,080.30* | 2,561.24* | |

* 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியவை மற்றும் பிடிகாசு என்பன உள்ளடக்கப்பட்டிருக்காமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இந்தத் தொகை வேறுபடுகின்றது.

### 6.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 5 முரண் கட்டளைகளின் கீழ் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ரூபா 95,427,826 தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தகைய முரண் கட்டளைகள் 2014 திசெம்பர் 31 வரை செயற்திட்ட பணிப்பாளரால் அங்கீகரிககப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி புனரமைப்பு வேலைகளின் போது அகழப்பட்ட மண் கொத்மலை ஆற்றுப் பள்ளத்தாக்கின் பிரதான அணைப்பகுதியில் மண் சரிவை தடுக்கின்ற கொத்மலை ஆற்றில் சேமிக்கப்பட்டிருந்தது என பௌதீக பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது. செயற்திட்டமானது அத்தகைய சுற்றாடல் விடயங்களை கண்காணிப்பதற்கு சுற்றுச்சூழல் நிபுணரை ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், சுற்றாடல் பாதுகாப்பு மீதான சிபாரிசுகள் மேற்குறிப்பிட்ட விடயங்களை கருத்திற்கொள்ளாமல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்தது.

(இ) தலவாக்கலை நகரத்தின் கடை உரிமையாளர்களின் எதிர்ப்பின் விளைவாக, செயற்திட்டமானது 1.5 கிலோமீற்றர் அகல நியமத்திற்கு எதிராக நகரப் பகுதியில் 88 + 200 கிலோமீற்றர் முதல் 88 + 400 கிலோ மீற்றர் வரை நடை பாதையை 0.4 கிலோமீற்றர் அகலத்தை குறைப்பதற்கு தீர்மானித்திருந்தது.

(ஈ) ஒப்பந்தகாரர் 2011 திசெம்பர் 01 இல் வேலைத்தளத்தினை நகர்த்தியிருந்த போதிலும், ரதல்லாவில் குறுக்குப்பாதை கொட்டகல சுரங்கவழி மற்றும் நானுஓயாவின் கீழ் பாதையினதும் நிர்மாண வேலைகள் தாமதமாக தொடங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

(உ) மேலும், குழுத் தலைவரின் 2013 திசெம்பர் 05 ஆந் திகதிய பிஈடி/எச்என்ஈ/13-1069 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்தகாரரின் பிரதிநிதிகள், தரக் காப்பீட்டு முகாமையாளர், நிர்மாண முகாமையாளர் மற்றும் பிரதம பொறியியலாளர் போன்ற

தகைமையுடைய ஆளணி வீதி நிர்மாண வேலைகளின் தரக் காப்பீடு மற்றும் சுமூகமாக செயற்பாடு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு ஒப்பந்தகாரரால் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013 பெப்ரவரி 13 ஆந் திகதிய ஆர்டிஏ/எம்எவ்ஏபி/ஈடிசீஎவ்/நிர்மாணம் ஆம் இலக்க செயற்திட்ட பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம், பொருட்கள் பொறியியலாளரின் சேவைகள் வீதியின் தளவரிகை இடும் போது பெறப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை பாதையின் தரக்காப்பீடு மீது தங்கியிருக்கின்ற வீதி நிர்மாணத்தின் வெற்றிக்கு மிகவும் முக்கியமாக இருந்தது.